ராணி-
காமிக்ஸ்
அதிரடிப் படை
ரூ.3

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ராணி காமிக்ஸ் – 397
(மாதம் இருமுறை இதழ்)
ஜனவரி 1 – 15
2001

அதிரடிப் படை

சத்தியமங்கலம் காட்டுப் பகுதிக்குள் பதுங்கி இருக்கும் வீரப்பனைப் பிடிக்க தமிழ்நாடு அரசின் அதிரடிப்படையும் கர்நாடக அரசின் அதிரடிப்படையும் முழுவீச்சில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தக் கதையின் தலைப்பும் அதிரடிப்படை என்றதும் இது வீரப்பனைப் பற்றிய கதை என்று நினைத்துவிடாதீர்கள்.

இது பிரிட்டிஷ்காரர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைப் பற்றிய கதை. ஜப்பானியர்கள் பிரிட்டிஷ்காரர்களின் எல்லைக்குள் நுழைய முயல்வதும், அவர்களை பிரிட்டிஷ் இராணுவத்தினர் எப்படி முறியடிக்கிறார்கள் என்பதே கதை.

இனி கதைக்கு வாருங்கள்!

அது ஒரு அடர்ந்த காடு. அந்தக் காட்டுக்குள்ளே பயங்கர மிருகங்களின் நடமாட்டத்துக்கு இடையே பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும், ஜப்பானிய வீரர்களும் முகாமிட்டிருந்தார்கள். எல்லையை பாதுகாத்துக்கொள்ள இருநாட்டவரும் உயிரைக் கொடுத்து போராடினார்கள்.

பிரிட்டிஷ் இராணுவப் படையில் ஜோன்ஸ், வாரன் என்ற இருவரை தினிப்பட்ட முறையில் இராணுவத்தில் சேர்த்திருந்தார்கள், இருவருமே வீரர்கள்தான். எல்லையை ஜப்பானியர்களிடம் இருந்து காக்க, இவர்கள் காட்டுக்குள் முன்னேறிக்கொண்டிருந்தார்கள்.

காட்டுக்குள் பாராசூட் பயிற்சி அளிப்பதற்காக ஓர் இடத்தில் முகாமிட டார்கள். ஜோன்சும், வாரனும் ஆற்றில் குளித்தார்கள்.
ஜோன்ஸ்! நாளை நடக்கும் பாராசூட் பயிற்சியை நினைத்தாலே பயமாக இருக்கிறது!
இதில் பயப்பட ஒன்றுமில்லை வாரன்!

அவர்கள் குளிப்பதை படைத்தலைவன் மில்லரும் பார்த்தார்கள் இருவரும் புதியவர்கள் என்பதால் கண்காணித்தார்கள்
இது எப்படி வந்தது!
அது எப்படியென்று தெரியவில்லை சார்ஜன்ட!

ராணுவ தளபதி மில்லனுக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். தெரிந்தும் கேள்வி கேட்டார்.
ஜோன்ஸ் முதுகில் ஏதோ தழும்பு இருக்கிறதே... எப்படி ஏற்பட்டது?
குளவி கொட்டி விட்டது!
மில்லர் வேண்டா வெறுப்பாய் நடந்துகொண்டார்.
எனக்கு குடிப்பவர்களைக் கண்டால் பிடிக்காது. நீ குடிப்பாயா?
இது முட்டாள்தனமான கேள்வி! முட்டாள்தனமான பதிலை எதிர்பார்ப்பதும தவறு!
ஜோன்ஸிடம் பேச்சுக் கொடுக்க முடியாமல் மில்லர் திரும்பிச் சென்றுவிட்டார்.
ஜோன்ஸ் உன்னைப் பற்றி நன்றாகவே மில்லருக்குத் தெரியும். பிறகு ஏன் இப்படிக் கேட்கிறார்?
அவருக்கு இதுவே பிழைப்பு ஆகிவிட்டது!

இருவரும் தன் பழைய கதைகளை பேசியபடி குளித்து முடித்து உடை மாற்றிப் புறப்பட்டார்கள்.
ஜோன்ஸ் மிகவும் கெட்டிக்காரர்தான்!
ஓ.கே. கூடாரத்துக்குப் போய் சூடாக தேனீர் சாப்பிடுவோம


இருவரும் கூடாரத்துக்கு திரும்புகிற வழியில்–
ஆ... அதோ பாம்பு!
நல்லபாம்பு ஒன்று வழியில் அவர்களைப் பார்த்து படமெடுத்துக்கொண்டிருந்தது.

ஜோன்ஸ் பாம்புவிடம் இருந்து தப்பிக்க உடனே தன் துண்டை எடுத்து பாம்புவின் மீது போட்டார்.
வாரன்... நீ அந்தப் பக்கம் போ!
அய்யோ...!
துண்டு பாம்பின் மீது விழுந்ததும் பாம்பு நன்றாக துண்டில் சுற்றிக் கொண்டது. உடனே ஜோன்ஸ் ஒரு மூங்கில் கம்பை எடுத்து பாம்பை விரட்ட முயன்றார்.
இதை கொல்லாமல் விடக்கூடாது!
இரண்டு நிமிடத்தில் நல்லபாம்பு செத்துப்போனது.
பாம்பு துண்டில் சுற்றிக்கொண்டதினால் அதனால நகர முடியாது! சரி... வா நாம் போகலாம்

இருவரும் கூடாரத்துக்கு வந்து தேனீர் சாப்பிட்டார்கள்.
நண்பர்களே! ஜோன்ஸ் பாம்பிடம் இருந்து என்னை காப்பாற்றிவிட்டார். துண்டை வைத்தே பாம்பை மடக்கிவிட்டார்!


வாரன் பாம்புக் கதையைச் சொல்லிக்கொண்டிருக்க ஜோன்ஸ் வெளியே வந்தார். எதிரில் தளபதி மில்லர் வந்தார்..
ஜோன்ஸ்! இன்று இரவு நீ ஆற்றில் இருந்து தண்ணீர் எடுத்துவர வேண்டும்!
அப்படியா.... நான் தயார்!

அன்று இரவு– ஜோன்சுடன் மற்றும் பலரும் அரை மைல் தூரத்தில் இருந்த ஆற்றில் தண்ணீர் எடுத்து வந்தார்கள். பொதுவாக தவறு செய்தவர்களைத்தான் தண்ணீர் எடுக்க அனுப்புவார்கள். ஆனால் அப்படி யாரும் இல்லாததால் ஜோன்சும் அனுப்பப்பட்டார்.
வாரனை விட்டுவிட்டு என்னை மட்டும் மில்லர் அனுப்பினாரே... நல்லதுதான்!

இன்னொரு தளபதி மில்லரைப் பார்க்க வந்தார்.
மில்லர்! ஜோனை நாம் அவசரத்துக்காக அழைத்து வந்திருக்கிறோம். அவரை இப்படி அலைக்கழிப்பது சரியல்ல!
என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?
வாரனை பாம்புவிடம் இருந்து காப்பாற்றிய ஜோன்ஸ் கூடாரத்தில் கதாநாயகன் போல ஆனது மில்லருக்கு பிடிக்கவில்லை.

மறுநாள்— மில்லர் ஜோன்ஸை சந்தித்துப் பேசினார்.
ஜோன்ஸ்! பாம்பிடம் இருந்து வாரனை காப்பாற்றியது உண்மையிலேயே சூரத்தனம்தான். அதற்காக உன்னை பாராட்டுகிறேன்!
இந்த வேலையை பால் குடிக்கும் சிறுவனே செய்து முடிப்பானே!
நான் அவனை பாராட்டத்தானே செய்தேன்... ஏன் இப்படி விரைத்துக்கொண்டு போகிறான்?
மில்லரின் பேச்சு ஜோன்சுக்கு பிடிக்கவில்லை.

மறுநாள்—பாராசூட் பயிற்சிக்கு தயாரானார்கள். ஜோனசுக்கும், வாரனுக்கும் இதுவே முதல்முறை.
வாரன் கீழே விழுந்ததும் பெல்ட்டை இழுத்துவிடு!
ஓ.கே. நான் உனக்கு பின்னேயே! வருகிறேன்!
விமானத்தில் இருந்து பாராசூட் வீரர்கள் குதித்தார்கள்.
வாரன்...! ம... குதி! ஏன் நிற்கிறாய்?
அது வந்து... அது வந்து...!
வாரன் பயந்துபோய் இருந்தான்!

வாரன்! நான் குதிக்கிறேன்!
நீ என் பின்னேயே குதி
நான் உன்னை
பார்த்துக்கொள்ளுகிறேன்!


ஜோன்ஸ் குதித்ததும், வாரனை விமானத்தில் இருந்து பிடித்துத் தள்ளி
விட்டார்கள்.
அப்பாடி....! நல்லவேளை என்
பாராசூட் விரிந்துவிட்டது!

காற்று எதிர்புக்கமாக அடித்ததால் பாரா்சூட் வீரர்கள் காட்டு எல்லை பக்கம் இறங்கினார்கள். ஜோன்சும், வாரனும் மிக நெருக்கமாக இறங்கினார்கள்.
இந்த முறை சரியாக குதித்துவிட்டேன் அடுத்து எப்படியோ...
ம்... பேசுவதற்கு இது நேரமல்ல. வேகமாக முன்னேற வேண்டும்!
அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் புலியின் பயங்கர உறுமல் சத்தம் கேட்டது.....
அய்யோ... புலி!
வாரன்... பயப்படாதே! புலி அரை மைல் தள்ளிதான் இருக்கிறது!

இராணுவ வீரர்களின் 'ஷூ'வையும், துப்பாக்கியையும் தூக்கிக்கொண்டு ஜோன்ஸால் ஓட முடியவில்லை.
என்ன ஜோன்ஸ்... என்னாச்சு
ஒன்றுமில்லை... லேசாக மயக்கம் போலத் தெரிந்தது!
மில்லர் அவர்கள் இருவரையும் நோட்டமிட்டார்.
பாம்பை அடித்து விரட்டுகிறான். ஷூ, துப்பாக்கியை தூக்கி நடக்க முடியவில்லை! வித்தியாசமாக இருக்கிறானே!


கூடாரத்தில் ஜோன்ஸ் கதையைக் கேட்டவர்கள்
அவரை பயமுறுத்த நினைத்தார்கள்.
ஒரு மணி நேரத்தில
ஜோன்ஸ் வந்துவிடுவான்!
சீக்கிரம் புலியை
தயார் செய்!
நிஜ புலிப் போல
தயார் செய்து ஜோன்ஸ்
கூடாரத்தில்
வைத்துவிட வேண்டும்!

புலித் தோலில் வைக்கோலை அடைத்து புலியை ஜோன்ஸ்
கூடாரத்துக்குள் நிற்க வைத்தார்கள்.
சூப்பர்!
கச்சிதமாக
இருக்கிறது!
அவன் புலியைப் பார்த்து
பேயறைந்தவன் போல
துடிக்கப்போகிறான்!

ஜோன்ஸ் வெளியே போய்விட்டு கூடாரத்துக்கு வந்தார். மூன்று பேர் புதருக்குள் மறைந்துகொண்டு நடப்பதை நோட்டமிட்டார்கள்.
கூடாரத்துக்குள் நுழைந்த ஜோன்ஸ் புலியைப் பார்த்ததும் வெலவெலத்துப் போனார்
பு... பு... புலி...!
அடுத்த நொடி ஜோன்ஸ் கத்தத் தொடங்கிவிட்டார்.
புலி... புலி...! என் கூடாரத்துக்குள் புலி வந்துவிட்டது...!

புதருக்குள் மறைந்து இருந்தவர்கள், ஜோன்ஸ் அலறுவதைப் பார்த்து கேலி செய்து சிரித்தார்கள்.
ஹா... ஹா... புலியைப் பார்த்து இப்படி கத்துகிறான் பார்!
ஏய்... என்னாச்சு!
மில்லரும் ஓடிவந்தார்.

உள்ளே போய் பார்த்தபோது அது புலித் தோல் என்று தெரிந்த்து.
இது வெறும் புலித் தோல்தான்!
முட்டாள்கள் என்னை பயமுறுத்த இப்படிச் செய்திருக்கிறார்கள்!

அந்த ஆத்திரத்தில் ஜோன்ஸ் அவர்களைத் தாக்கினார்.

ஜோன்ஸ் அவர்களை கடுமையாகத் தாக்கினார்.

வாரனும் பதட்டத்தைப் பார்த்து ஓடிவந்தான்.

மில்லரும் வாரனும் ஜோனை மடக்கிப் பிடித்தார்கள்.
ஜோன்ஸ் ஆத்திரப்படாதே! அவர்களை நான் கவனித்துக்கொள்ளுகிறேன்!
விடு ஜோன்ஸ்! ஏதோ தெரியாமல் செய்துவிட்டார்கள்!
பயிற்சி நேரத்தில் தங்களுக்குள்ளே இப்படி சண்டை போட்டுக்கொள்வது நல்லது அல்ல என்று அவர்கள் நினைத்தார்கள்
மறுநாள்– மேஜர் திவார் அவர்களைக் கூட்டினார்.
நாளை இரவு நாம் ஜப்பானியர்களின் எல்லைக்கு அருகே நாம் போய் கண்காணிக்க வேண்டும்!

மறுநாள் இரவு— ஜப்பானிய எல்லையில் ஜப்பானிய வீரர்கள் காவல் இருந்தார்கள்.
பிரிட்டிஷ் விமானங்கள் எங்கே போகின்றன?
தெரியவில்லை! ஆனால் ஏதோ பிரச்சினை வரும் போலிருக்கிறதே!
இந்த பாராசூட் படை 'மில்லரின் தலைமையில் சென்றது.
அனைவரும் பாராசூட்டை அணிந்துகொள்ளுங்கள். ஜப்பானியர்களின் எல்லைக்கு அருகே வந்துவிட்டோம்!
வாரன்! உனக்கு எப்படி இருக்கிறது?
நன்றாக இருக்கிறது! கீழே குதிக்கும்போது தான் தெரியும்!

விமானத்துக்குள்– ஜோன்ஸ் குதிக்கத் தயாராக இருந்தார்.
அப்போது மில்லர் அவரை கேலி செய்தார்.
ஜோன்ஸ்! பாரர்சூட்டில் குதித்து புலியின் மீது இறங்கிவிடாதே!


மில்லர் அப்படிச் செர்ன்னதும் ஜோன் குதிக்காமல் நின்றார்.
ம்... வேகமாகக் குதி!
இல்லை... நான் குதிக்கப் போவதில்லை!
ஜோன்ஸ் அடம்பிடித்தார்.

அடுத்த நொடி–மில்லர் ஜோன்சை விமானத்தில் இருந்து கீழே தள்ளி விட்டார்.
போ கீழே போ !
ஜோன்ஸ் கீழே வந்ததும் பாராசூட் விரிந்துகொண்டது.
முடிவில் அனைவரும் பத்திரமாக தரை இறங்கினரார்கள்.
ஜோன்ஸ் ! உனக்கு ஒன்றுமில்லையே ?
பத்திரமாக தரை இறங்கிவிட்டேன் வாரன் !

மேஜர் திவார் அவர்களை அழைத்தார்.
விரைவாக வாருங்கள்! ஜபபானியர்கள் எல்லையை நெருங்கிவிட்டோம்!
ஜோன்சும், வாரனும் ஒருபக்கமர்க வந்தார்கள்.
மில்லர் ஒருமுறை நன்றாக பேசுகிறார். திடீரென்று வில்லன் போல செயல்படுகிறார் ஏன்?
ஜப்பான் வீரர்கள் பிரிட்டிஷ்காரர்களைப் பார்த்ததும் சுட்டுத்தள்ளினார்கள்
சார்! மில்லரையும இன்னும் ஆறு பேரையும் காணவில்லை!
காட்டுக்குள் திசைமாற போயிருபபார்கள்!

மில்லர் காணாமல் போன செய்தி ஜோன்சுக்கு தெரிந்தது.

ஜப்பான் இராணுவத்துக்கும் பிரிட்டிஷ் வீரர்களுக்கும் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.


காசின் என்ற ஒரு கூட்டம் பிரிட்டிஷ் வீரர்களுடன் சேர்ந்து ஜப்பான் வீரர்களை சுட்டுத்தள்ளியது.
டுமீல்
அவர்களை முன்னேற விடாதீர்கள்!
ஆ...!
காசின் என்பவர்கள் பர்மாவை பூர்வீகமாக கொண்டவர்கள். ஜப்பானியர்கள் அவர்களை விரட்டியதால் அவர்கள் ஜப்பானியர்களை எதிர்க்கிறார்கள்.

பிரிட்டிஷ் படைவீரர்கள் வேகமாக முன்னேறினார்கள்.
விடாதே...!
ம்.... இதுதான் சரியான முடிவு...!

பிரிட்டிஷ்காரர்களும் காசினத்தவரும் சேர்ந்து தாக்கினாலும் ஜப்பானியர்களை வீழ்த்த முடியவில்லை.

காசினத்தவரின்
தலைவன் லம்ஸ்டனும் தனியே தன் படையுடன் போரிட்டார்.

திடீரென்று ஜப்பானியர்களிடம் இருந்து எந்தத் தாக்குதலும் வரவில்லை.
ஜப்பானியர்கள் என்ன ஆனார்கள்?
அவர்கள் நமக்கு பயந்து பின் தங்கிவிட்டார்கள் போலிருக்கிறது!
அதோ காசினத்தவர்கள் ஜப்பானியர்களின் துப்பாக்கியுடன் வருகிறார்கள்!
முதலில் நாம் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்போம்!

காசினத்தவர் சிலர் குண்டடிபட்டு இருந்தார்கள்.
லேசான காயம்தானே! வாருங்கள்!
எங்கள் தலைவர் லம்ஸ்டனை ஜப்பானியர்கள் பிடித்துச் சென்றுவிட்டார்கள்!
நாங்கள் ஜப்பானியர்கள் சிலரை கொன்று துப்பாக்கிகளை அபகரித்தோம். அதற்குள் எங்கள் தலைவரின் காலில் குண்டுபட்டது. அவர்கள் தலைவரை கடத்திச் சென்றுவிட்டார்கள்.

எப்புடியாவது காசினத் தலைவரை ஜப்பானியர்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்!

உடனே ஜோன்ஸ் துப்பாக்கியுடன் புறப்பட்டார்.
லம்ஸ்டனை அவர்கள் கொலை செய்வதற்குள் காப்பாற்றிவிட வேண்டும்!

ஓர் இடத்தில் ஜப்பானியர்கள் லம்ஸ்டனை மரத்தில் கட்டி வைத்திருந் தார்கள். அதை ஜோன்ஸ் பார்த்தார்.
இதோ... லம்ஸ்டன்!
நாயே எங்களுக்கு எதிராகவா செயல்படுகிறாய். நீ சாகவேண்டும்!

திடீரென்று ஜோன்ஸ் களத்தில் இறங்கி ஜப்பானியர்களை சரமாரியாக சுட்டுத்தள்ளினார்.
ஆ...!
டுமீல்...!
பயப்படாதீர்கள். நான் உங்களை காப்பாற்றுகிறேன்!

ஜோன்ஸ் ஜப்பானியர்களை சுட்டுத்தள்ளியதும் லம்ஸ்டனின். கட்டுக்களை அவிழ்த்துவிட்டார்
யார் நீ...? காலில் குண்டு பாய்ந்திருக்கிறது. என்னால் நடக்கமுடியாது!

ஜோன்ஸ் லம்ஸ்டனை முதுகில் சுமந்துகொண்டு வேகமாக ஓடினார்.

பிரிட்டிஷ்வீரர்கள் இருக்கும் இடத்துக்கு ஜோன்ஸ் வந்து சேர்ந்தார்.

ஜோன்ஸ் ஒரு வழியாக ல்ம்ஸ்டனை மீட்டுக்கொண்டு வந்தார். உடனடி யாக அவருக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட்டது.
எங்களுடன் இருந்த உங்களை யார் கடத்திச் சென்றது?
சில ஜப்பானிய வீரர்கள் என்னை சுட்டுத்தள்ளிவிட்டு தூக்கிச் சென்று விட்டார்கள்!
காசினத்தவரும், பிரிட்டிஷ் வீரர்களும் ஜோன்ஸை பாராட்டினார்கள். வாரனை காசினத்தவருக்கு தலைமை ஏற்க செய்தார்கள். மேஜர் திவார் ஜோன்ஸை அழைத்தார்.
சார்! என்னை அழைத்தீர்களாமே?
ஆம... உன் தைரியததை பாராட்டுகிறேன்! ஜோன்ஸ், நீயும் வாரனும் காசினத்தவருக்கு பாதுகாப்பாக சென்று அவர்கள் இடத்தில் விட்டு வாருங்கள்!
ஜோன்சும், வாரனும் அதற்கு சம்மதித்தார்கள்.


ஜோன்சும், வாரனும் காசினத்தவர்களை பத்திரமாக அவர்கள் இடத்தில் சேர்த்தார்கள். சில நாட்கள் எல்லைகள் அமைதியாக இருந்தன. ஜோன்சும், வாரனும் அங்கே நீராடினார்கள்.
ஜோன்ஸ்! காசினத்தவர்கள் என்னை தலைவராக நினைக்கிறார்கள்!
நல்லது கேப்டன் வாரன்! உனக்கு ஏற்ற பதவிதான்!

அவர்கள் குளிப்பதை காசினத்தவரில் இருவர்பார்த்தார்கள். ஜோன்ஸின் முதுகில் இருந்த தழும்பை பார்த்தார்கள்.
புலி... புலி...!
ஏன்... இப்படி கத்துகிறீர்கள்...

உடனே ஜோன்ஸ் துண்டை எடுத்து தழும்பை மறைத்தார்.
வா குளித்தது போதும்!
ஜோன்ஸ் ஜப்பானியர்களுக்கு என்றுமே பயந்ததில்லை. ஆனால் புலி என்றால் ஏன் இப்படி பயப்படுகிறார்!
வாரனுக்கு சந்தேகம் வந்தது.
ஒரு நாள்—
ஏய் அங்கே பார் ஏதோ வெளிச்சம் சிக்னல் போலத் தெரிகிறது!
யாரோ கண்ணாடியை வைத்து சூரிய ஒளியை காட்டுகிறார்கள்!

அதேநேரம் பிரிட்டிஷ் படைவீரர்களும் அந்த சிக்னலை கவனித்தார்கள்.
யாரோ கண்ணாடியை வைத்து சூரிய ஒளியை பிரதி பலிக்கிறார்கள்!
சிக்னல் மூலமாக செய்தி வந்தது.
மில்லரும் அவருடன் காணாமல் போனவர்களும்தான் உதவி கேட்டு சிக்னல் கொடுக்கிறார்கள்!
பாராசூட் பயிற்சியின்போது காணாமல்போன மில்லர்தான். சந்தேகமில்லை!

அதற்குள் ஜோன்சும், வாரனும் பிரிட்டிஷ் படையுடன் சேர்ந்துகொண்டார்கள்.
மில்லர் உயிரோடுதான் இருக்கிறார்!
சார் நான் காசினத்தவருடன் சென்று மில்லரை மீட்டு வரட்டுமா?

ஓ.கே. வாரன்! உன்னுடன் துணைக்கு சில வீரர்களை அழைத்துச் செல்!
மில்லர் உயிருடன் இருக்கிறானா?

வாரன் தன்னுடன் ஜோன்ஸையும் சேர்த்துக்கொண்டான். காசினத் தலைவர் லம்ஸ்டனும் சேர்ந்து கொண்டார்.
ஓ.கே. ஜோன்ஸையும் சேர்த்துக்கொள்!
நன்றி சார்!
வாரன் சில வீரர்களுடன் மில்லரைத் தேடி புறப்பட்டான்.
மில்லர் வந்துவிட்டால் நமக்கு தொல்லை தான்!
நாம் செல்வதை ஜப்பானியர்கள எளிதில் மோப்பம் பிடித்துவிடுவார்கள்!
ஆமாம்!
அவர்கள் அடர்ந்த காட்டுக்குள் எச்சரிக்கையுடன் பயணமானார்கள்.

சிறிது தூரத்துக்குப் பிறகு—
எதுவும் தெரியவில்லை! நாம் வானத்தை நோக்கி சுடுவோம். மில்லரிடம் இருந்து பதில் சிக்னல் கிடைக்கிறதா என்று பார்ப்போம்!
சுட்டது போதும்! ஜப்பானியர்கள் நம்மை நோக்கி வந்துவிடப் போகிறார்கள்!

ஒரு மலை உச்சியில்—
இதோ அவன் நமது வீரன்தான்! மில்லரும் மற்றவர்களும் அங்குதான் இருக்க வேண்டும்.

ஏய்... இது பேக்கர்!
அருகில் புலி இருப்பது போலத் தெரிகிறதே!
புலி
அனைவரும் மேலே வந்தார்கள்.
நாம் உடனடியாக குகைக்குச்
நடந்ததை பேக்கர் கூறினான்.
குகைக்குள் மில்லர் மாட்டிக் கொண்டிருக்கிறார். அவரை கடித்துத்

அனைவரும் குகையை நெருங்கினார்கள்.
புலி உறுமல் கேட்கிறது! ஏன் சுடக்கூடாது என்கிறீர்கள்?
வாரனும், கார்சினத்தவர் இருவரும் குகைக்குள் நுழைய முயன்றார்கள்.
மில்லர்! இதோ நாங்கள் வருகிறோம். பயப்பட வேண்டாம்!
மில்லர் இரண்டு பாறைகளுக்கு இடையே பதுங்கியிருக்கிறார். அவரை பிடிப்பதற்காக புலி காத்திருக்கிறது!


உள்ளே புலியின் உறுமல் கேட்டுக்கொண்டே இருந்தது.
அய்யோ... புலியிடம் இருந்து எப்படி தப்பிப்பது!
நாம் ஏன் இங்கே காத்திருக்க வேண்டும?

வாரனும் மற்றவர்களும் வெளியே காத்திருந்தார்கள்.
புலி மில்லரை கடித்துக் குதற தயாராக இருக்கிறது! சுட்டால் மில்லரை நாம் காப்பாற்ற முடியாது!

ஜோன்ஸ் ஒரு முடிவுக்கு வந்தார்.
என் துப்பாக்கியை கொஞ்சம் பிடி!
ஜோன்ஸ்! என்ன செய்யப் போகிறாய்?
ஜோன்ஸ் அருகில் இருந்த மூங்கில் மரக் கம்பை உடைத்து வந்தார்.
சார்! நான் இந்த மூங்கிலால் புலியை விரட்டி மில்லரை காப்பாற்றுகிறேன்!
எப்படி?
ஜோன்ஸ் மட்டும் மூங்கில் கம்புடன் குகைக்குள் நுழைந்தார். அங்கே புலி மில்லர் இருந்த பாறைக்கு அருகே நின்றுகொண்டிருந்தது.
ஏய்... புலி... வெளியே போ!

ஜோன்ஸ் புலியை அடிப்பது போல பாவனை செய்தார்.
ஏய்... நான் சொல்வதைக் கேள்!

ஜோன்ஸ் குரலைக் கேட்டதும் மில்லர் பாறையில் இருந்து வெளியே எட்டிப் பார்த்தார்.
ஏய்... புலி! வா என்னுடன்!
ஜோன்சுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?

ஜோன்ஸ் ஒரு வழியாக புலியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.
போ... வெளியே!

புலி முரண்டுபிடித்தது. ஜோன்ஸ் மூங்கில் கம்பை வைத்து பாவனை செய்தார்.
போ...

முடிவில் புலி விட்டால் போதும் என்று குகையைவிட்டுவெளியேவந்த
போ... வெளியே! யாரும் புலியை சுட்டுவிடாதீர்கள்!
அய்யோ...!

ஜோன்ஸ் புலியை கம்பால் விரட்டுவதைப் பார்த்து அனைவரும் வியந்துபோய் நின்றார்கள். புலி நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோடியது.

மில்லர் குகைக்குள் இருந்து தளர்ந்துபோய் வெளியே வந்தார்.

மில்லருக்கு குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்கள்.

மில்லர் தன் உயிரைக் காப்பாற்றியதற்கு ஜோன்சுக்கு நன்றி சொன்னார்

ல்லரை மீட்டுவிட்டு அனைவரும் திரும்பினார்கள்.

அதேநேரம் குகை-
யைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட
புலி பழி வாங்க

அவர்கள் திரும்பிக்கொண்டிருந்தபோது— காசினத்தவன் ஒருவன் கால் இடறி கீழே விழப்போய்— கையில் இருந்த துப்பாக்கி வானத்தை நோக்கி சுட்டது.
டுமீல்....!
முட்டாள்! நீயே நம்மை காட்டிக் கொடுத்துவிடுவாய் போலிருக்கிறதே!

சத்தம் வராமல் பதுங்கி வாருங்கள்!
இதற்குள் ஜப்பானியர்கள் உஷார் ஆகி இருப்பார்கள்!

அவர்கள் நினைத்தது போலவே ஜப்பானியர்கள் அவர்களை தாக்க தயாராக இருந்தார்கள்.
ம்... அந்தா ஜப்பானியர்கள்!
டுமீல்...!
ஆ...!

திடீரென்று மரத்தில் இருந்து ஜப்பானியர்கள் பொத் பொத் என்று குதித்தார்கள். இருவருக்குமிடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.
நம்மை எதிர்பார்த்து மரத்தில் பதுங்கியிருந் திருக்கிறார்கள்!

விரட்டியடிக்கப்பட்ட புலியும் பிரிட்டிஷ் படை வீரர்களை தொடர்ந்து வந்துகொண்டே இருந்தது.
இந்த முறை இவர்களை விடக்கூடாது!
செத்துத் தொலை

அந்த போராட்டத்தில் ஜப்பானியர்களின் கை ஓங்கியது. பிரிட்டிஷ் வீரர்கள் நிறைய பேர் கொல்லப்பட்டனர்.
எங்களை ஒன்றும் செய்யாதீர்கள். நாங்கள் சரணடைந்துவிடுகிறோம்!
அவர்களில் வாரனும், ஜோன்சும் இருந்தார்கள்.

அனைவரும் மரியாதையாக எங்கள் பின்னே வாருங்கள்!
ஜப்பானியர்கள் அவர்களை ஒரு கிராமத்துக்கு அழைத்துவந்தார்கள்.
வேகமாக நடங்கடா!
சார்! இனி என்ன செய்வது?
நாம் தப்ப முயன்றால் வெளியே இருப்பவர்கள் நம்மை சுட்டுக் கொன்றுவிடுவார்கள்!
அந்த கிராமத்தில் ஒரு குடிசையில் அவர்கள் தங்க வைக்கப்பட்டார்கள்.

ஜப்பானியர்கள் வெளியே பேசிக்கொண்டு இருந்தார்கள்
இன்று இரவு இவர்களை நம்முடைய முகாமுக்கு கொண்டுசெல்ல வேண்டும்!
ஓ.கே. சார்!
அதை குடிசையில் இருந் பிரிட்டிஷ் வீரர்கள் கேட்டார்க
பேசாமல் குடிசையை பிய்த்துக்கொண்டு தப்பி ஓடிவிடலாமா?
அவர்கள் பார்த் விட்டால் சுட் தள்ளி விடுவார்கள்
கடைசியில் அந்தப் புலி ஜோன்சைத் தேடி அங்கேயும் வந்தது.
பிரிட்டிஷ் காரர்களை பிடித்தது நல்ல வேடிக்கைதான்!

டிசைக்குள்ளே—
ாசல் கதவுக்கு பின்னே ஒரு பெரிய கல்லை வைத்துவிட்டு அந்தப் மாக தப்பிவிடலாம்!
ஓ.கே. இதுதான் நாம தப்பிக்க சரியான நேரம்!
அவர்கள் குடிசையை பிய்த்து தப்பியதை ஜப்பானியர்கள் பார்த்தார்கள்.
ஏய்... அவர்கள் தப்பிக்க முயல்கிறார்கள்! விடாதே பிடி!

ஜப்பானிய வீரர்கள் அந்தக் குடிசையின் கதவை திறக்க முயன்றார்கள்.

அடுத்த நிமிடம் புலி அவர்கள் மீது பாய்ந்தது. புலியை எதிர்பார்க்காததால் அவர்கள் நிலைதடுமாறிப் போனார்கள்.

ரிட்டிஷ் வீரர்கள் தப்பி ஓடினார்கள்.
நல்லவேளை! நம்மை காப்பாற்ற புலி வந்திருக்கிறது நமக்கு அதிருஷ்டம்தான்!

அனைவரும் வேகமாக திரும்பினார்கள்.
நாம் திரும்புவோம் என்று எதிர் பார்க்கவே இல்லை!!
புலி மட்டும் வராது இருந்தால் அவர்கள் நம்மை சுட்டுத் தள் ளியிருப்பார்கள்!

அங்கே மற்ற பிரிட்டிஷ் படை வீரர்கள் எல்லையில் காவலுக்கு இருந்தார்கள்.
ஏய்... வாரனும் மற்றவர்களும வருகிறார்கள். எதிரிகள் என்று சுட்டுவிடாதீர்கள்

மில்லரையும் மற்ற வர்களையும் மீட்டு வந்துவிட்டோம்!

டிஷ் இராணுவ தலைமை அதிகாரியிடம்நடந்ததைசொன்னார்கள்.
ஜோன்ஸ்! உன்னைப் பற்றி எல்லாரும் சொன்னார்கள் அதெப்படி மில்லரை புலியிடம் இருந்து, காப்பாற்றினாய்?
சார்! நான் இதற்குமுன் சர்க்கஸில் மிருகங்களுடன் பழகியிருக்கிறேன்!
க்கஸ் அனுபவங்களை
நான் பர்மாவில் இருந்தபோது நான்கைந்து புலி சிங்கங்களை பழக்கியிருக்கிறேன். ஒருநாள் அதில் ஒரு புலி என்னை கடிக்க வந்துவிட்டது!

அன்று சர்க்கஸில்— புலி ஜோன்ஸை புரட்டி எடுத்தது.



தங்கக் கிளி

அமுதா கணேசன்

19

முன் கதைச் சுருக்கம்!

தேனாடு என்ற நாட்டை செங்குட்டுவன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரே மகள். இளவரசி முத்தாரம் என்று பெயர். அவளது அழகில் மயங்கிய மந்திரவாதி கொம்பன் என்பவன், தங்கக் கிளியாக மாறிவந்து, இளவரசியைத் தூக்கிப்போனான். இளவரசியை மீட்டு வருகிறவனுக்கு அவளை மணமுடித்துக் கொடுக்கப்படும் என்று அரசன் அறிவித்தான். வீரநம்பி என்ற இளைஞன் முன்வந்தான். அவன் மந்திரவாதியின் குகைக்குச் சென்றான். இளவரசி அவனை நம்ப மறுத்தாள். மந்திரவாதிதான் மாறுவேடத்தில் வந்திருப்பதாக நினைத்தாள்.

எதிரில் நின்ற அம்மன் சிலையை வீரநம்பி பார்த்தான்

"அந்த அம்மன் மீது ஆணையாகச் சொல்லுகிறேன் என் பெயர் வீரநம்பி. உன்னை மீட்டு வர உன் தந்தைதான் என்னை அனுப்பி வைத்தார்" என்று வீரநம்பி கூறினான்

அதைக்கேட்டதும் அவன் மீது இளவரசிக்கு சிறிது நம்பிக்கை ஏற்பட்டது.

"மந்திரவாதியின் கட்டுக்காவலை மீறி இங்கே எப்படி வந்தாய்?" என்று இளவரசி கேட்டாள்.

"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பது உனக்குத் தெரியாதா? அந்த வல்லவன்தான் நான்" என்று வீரநம்பி கூறினான்.

"சரி, உன்னை நம்புகிறேன். வா, இருவரும் குகையைவிட்டு ஓடிவிடுவோம்" என்று இளவரசி சொன்னாள்

"ஓடிப் பயனில்லை" என்றான், வீரநம்பி.

"ஏன்?" இளவரசி கேட்டாள்.

"அவன் மந்திரவாதி. நாம் எங்கே ஓடினாலும் கண்டுபிடித்து

விடுவான். கடலுக்குள் போய் மறைந்துகொண்டால்கூடப் பின்னேயே வந்துவிடுவான். எனவே, அவனது கணக்கை முடித்துவிடுவதுதான் நல்லது" என்றான், வீரநம்பி.

அதைக்கேட்டு, இளவரசி முகம் மலர்ந்தாள் "நீ சுத்த வீரன்! இப்போதுதான் எனக்கு உன் மீது முழு நம்பிக்கை ஏற்படுகிறது!" என்று சொன்னாள்.

அப்போது குகையின் கதவு திறக்கப்படுவது போல "சர சர " என்ற ஓசை கேட்டது.

"மந்திரவாதி வந்துவிட்டான் போலிருக்கிறதே?" இளவரசி அஞ்சி நடுங்கினாள்.

"வரட்டும்!" வீரநம்பி நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு சொன்னான்

"அவன் உன்னைப் பார்த்தால் ஆபத்து. போ போய் அம்மன் சிலையின் பின்னே ஒளிந்துகொள்" என்று இளவரசி படபடத்தாள்

"எபபடியும் மந்திரவாதியை நேருக்கு நேர் சந்தித்துத்தானே ஆகவேண்டும்? இப்போதே சந்தித்துவிடுகிறேன்" என்று வீரநம்பி கூறினான்.

இதற்குள் மந்திரவாதி குகைக்குள் வந்துவிட்டான்

குகைக்குள் பேச்சுக் குரல் கேட்கவே வேகமாக வந்தான்

இளவரசியுடன் ஒரு இளைஞன் நிற்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான்

"யாரடா நீ? இந்தக் குகைக்குள் எப்படி வந்தாய்?" என்று பரபரப்புடன் அவனை நெருங்கி வந்தான்.

"அவரை ஒன்றும் செய்துவிடாதே!" இளவரசி அவனைத் தடுத்தாள்.

"நீ விலகி நில். அவனால் என்னை ஒன்றும் செய்ய முடியாது" என்ற வீரநம்பி, இளவரசியைப் பின்னே இழுத்தான்

"கடுமையான கட்டுக்காவலை மீறி என் குகைக்குள் எப்படி வந்தாய்? ஏன் வந்தாய்? நீ யார்?" மந்திரவாதி படபட என்று பேசினான்.

"காட்டைக் கடந்து, மலை ஏறி, குகைக்குள்ளேயே நான் வந்துவிட்டேனே! இதிலிருந்து நான் யார் என்பதை நீ புரிந்து கொள்ளலாமே!" வீரநம்பி பொறுமையாகப் பதில் அளித்தான்

"நீ வீரன்தான்! இங்கே ஏன் வந்தாய்?" மந்திரவாதி மீண்டும் கேட்டான்.

"உன்னிடமிருந்து இளவரசியை மீட்டுப் போக வந்தேன்!" என்றான், வீரநம்பி.

"ஆ! அது உன்னால் முடியாது!" மந்திரவாதி துடித்தான்.

"நான் உயிரோடு இருக்கும்வரை என்னிடமிருந்து யாராலும்

இளவரசியைப் பிரிக்க முடியாது" என்று வெடித்தான்

"இதுதான் உன் முடிவு என்றால், உனக்கு மரணம் தவிர வேறு இல்லை" என்று வீரநம்பி கூறினான்.

"இல்லை! உனக்குத்தான் மரணம்! இங்கே இருந்து நீ உயிருடன் திரும்பிப் போகப்போவது இல்லை" என்று மந்திரவாதி கர்ச்சித்தான்.

இந்தக் குகைக்குள் இதுவரை அவனைத் தவிர வேறு யாரும் வந்தது இல்லை. இதனால் அவன் மிகவும் அதிர்ச்சியுடன் இருந்தான். அந்த அதிர்ச்சி கோபமாக மாறியது. அந்தக் கோபத்தில் கடுமையாகப் பேசினான்.

வீரநம்பி பொறுமையாக இருந்தான். அமைதியாகப் பேசினான்.

"என் குகைக்குள் வந்துவிட்ட உன்னை உயிருடன் வெளியில் விடமுடியாது. உன் மரணம் மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உன்னை அம்மனுக்குப் பலி கொடுக்கப் போகிறேன்" என்று மந்திரவாதி கூறினான்.

"நானும் ஒரு முடிவுடன்தான் வந்திருக்கிறேன். உன்னை அம்மனுக்குப் பலி கொடுப்பேன்!" என்று வீரநம்பி கூறினான்.

"யார் பலியாகிறார்கள் என்பதைப் பார்த்துவிடுவோம் என்று மந்திரவாதி, "ஜெய் காளீ... என்று கையை நீட்டினான்.

அவன் கையில் ஒரு வாள் வந்தது!

உடனே வீரநம்பியும் தனது வாளைக் கையில் எடுத்துக்கொண்டான்

இருவரும் மோதினார்கள்.

கடுமையான மோதல்! மின்னல்கள் மோதிக்கொண்டது போலிருந்தது!

மந்திரவாதியும் வாள்வீச்சில் கெட்டிக்காரனாக இருந்தான். ஆனால் வீரநம்பி அவனைவிட வீரன் அதிகாச சூரன்! அவனது வாள்வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் மந்திரவாதி திணறினான்!

நேரம் ஆக ஆக இருவரும் ஆவேசமாகப் போரிட்டார்கள்

இளவரசி ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வீரநம்பி தனது சக்தி முழுவதையும் திரட்டி, வாளை வீசினான்!

மந்திரவாதியின் கையிலிருந்த வாள், கீழே விழுந்தது!

கண் இமைக்கும் நேரத்தில் வீரநம்பி வாளைச் சுழற்றினான்

மந்திரவாதியின் கழுத்தில் வாள் பாய்ந்து, அவனது தலை வெட்டுப்பட்டுக் கீழே விழு !

(தொடரும்)

1991

அச்சிட்டு

ஆ... பிரஸ், 1091, ... சென்னை-600 007 ஆசிரியர் ...

1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007

அடுத்த காமிக்ஸ்

அதிரடிக் கதை

இரகசியத் தீவு

நகருக்குள் அங்கங்கே கட்டிடங்கள்
வெடித்துச் சிதறுகின்றன.
காரணம் என்ன?

திகைக்க வைக்கும் படக்கதை !	**படிக்கத் தவறாதீர்கள் !**
ஜனவரி 16 "ராணி காமிக்ஸ்" இதழில் வெளிவருகிறது !	"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd.with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Maitri.com